# 2.10 இந்த விடுதலை

**வேத வசனம்:** ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். யாக்கோபு 4:7

**சத்தியம்:** ஒருவன் சத்தியத்தை அறிந்தால் சத்தியம் அவனை விடுதலையாக்கும். ஏனென்றால் நம்மை விடுதலையாக்குகிற குமாரன் விடுதலையாக இருக்கிறார்.

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *பறவைகள் சுதந்திரமாக பறப்பதைப் பார்த்து மனிதர்கள் பொறாமைப்படுவது ஏன்?*
- *நாம் தெரிந்தெடுக்கும் வழிகளில் நீதிமொழிகள் 14:12 என்ன எச்சரிக்கையைக் கொடுக்கிறது?*
- *தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தெரிந்தெடுத்தல் எவ்வாறு விடுதலையைக் கொடுக்கிறது?*

**அறிக்கை:** நான் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது எனக்கு அவருடைய வல்லமையும் மிகுந்த சந்தோஷமும் கிடைக்கும்.

## பாடக்குறிப்புகள்

- **உண்மையான விடுதலை மற்றும் பொய்யான விடுதலை.** *மத் 24:12, நீதி 14:12*
- **உண்மையான விடுதலை.** *யோவான் 8:36*
- **தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்.** *கொலோ 3:20*
- **மிகுந்த சந்தோஷமும் மகிழ்ச்சியும்.** *நெகே 8:10*

**வேதப்பகுதி**
*யோவான் 8:30-36*

**இனி கட்டப்படுவது இல்லை:** நாம் விடுதலையாக நடந்துகொண்டே சங்கிலிகளால் கட்டப்பட்ட நிலையில் இருக்க முடியும். அநேகர் மன அழுத்தம் பாலுறவு பாவம், தாழ்வான சுய மதிப்பீடு போன்ற கட்டுகளால் கட்டப்பட்டிருக்கின்றனர். நாமோ தேவனுக்குக் கீழ்ப்படிவதையும் அவரைப் பின்பற்று வதையும் தெரிந்தெடுக்கும் போது இவை எல்லாவற்றிலுமிருந்தும் விடுதலையைப் பெறுகிறோம். அது விசேஷித்த சந்தோஷத்தையும் கொடுக்கிறது. இதுவே நமது பெலன். இந்த மகிழ்ச்சியினால் நாம் தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்யவும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவும் முடியும். இதுவே கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் மற்றும் மிகுந்த மகிழ்ச்சி-வல்லமை ஆகியவற்றிற்கு இடைப்பட்ட சிறந்த உறவு. இவ்வாறாக கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது நமக்கு உண்மையான விடுதலைக் கிடைக்கிறது.

**செயல்**

தேவன் கொடுக்கும் இலவசமானச் சந்தோஷத்தை உணர்ந்து அனுபவி. இன்று ஏதாவது ஒரு விதத்தில் தேவனுடைய சந்தோஷத்தை ஒருவருடன் பகிர்ந்து கொள்ளும் வழியைக் கண்டுபிடி.

**சிந்திக்க:** *தேவன் கொடுக்கும் சந்தோஷம் பெலன் அளிக்கிறது. எவ்வாறு?*

**ஜெபம்:**

*தேவனுடைய சந்தோஷத்தைப் பெற உன் இருதயத்தைத் திறக்கும்படி ஜெபம் ஒன்றை எழுது.*